# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2482 - 2026 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2026.03.27

2482 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |

| | பக்கம் |
|---|---|
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 02 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 – B82778 - 5403 (2026/03)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

## வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் திட்டமிடல் கலைஞர் (ஒரு வருட பயிற்சி தரம்) பதவிக்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் திட்டமிடல் கலைஞர் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள பெண் / ஆண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2026 மே மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது. இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

01. **கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள்** :- மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு,

(அ ) கல்வித் தகைமைகள் :-

பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் கணிதப் பாடவிதானத்தைச் சேர்ந்த பாடங்கள் மூன்றுடன் கூடிய க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையை ஒரே அமர்வில் சித்தியெய்திருத்தல்.

அல்லது

தொழில்நுட்பவியல் பாட விதானத்தின் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியெய்திருத்தல்.

மற்றும்

சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வி ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**க.வே. - மேற்கூறிய கல்வித் தகைமைகளுடன் ஒவ்வொரு பதவிக்குமான தொழிற் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

(ஆ) தொழிற் தகைமைகள் :-

| *பதவிப் பெயர்* | *தொழிற் தகைமைகள்* |
|---|---|
| திட்டமிடல் கலைஞர் (ஒரு வருட பயிற்சி தரம்) | I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் திட்டமிடல் கலையுடன் தொடர்பான ஒரு வருட முழு நேர கால பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக உள்ளதா என்பது பற்றி மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |

**க.வே. மேற்படி சகல கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் 2026.04.27 ஆந் திகதிக்கு முன் அல்லது அன்றைய தினம் முழுமைப்படுத்தி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**02. ஏனைய தகைமைகள் :**

2.1 விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 எல்லா விண்ணப்பதாரர்களும் வடமேல் மாகாணத்தினுள் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல், உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (DS-04 கிராம அலுவலர் சான்றிதழ்) மூலம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் விண்ணப்பதாரிகளும் DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் மூலம் தாங்கள் வசித்து வரும் காலம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

2.4 விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணையும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 ஆண்டுகளில் வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால், அவ்விண்ணப்பதாரிகள் தொடர்பில் மேற்படி 2.3 ஆம் பிரிவின் படி கவனத்திற் கொள்ளப்படுவார்கள். வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS 04) மற்றும் விவாகச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

2.5 குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டால் குறைந்தபட்சம் 10 வருடங்கள் வடமேல் மாகாணத்தினுள் சேவையாற்றுதல் வேண்டும்.

2.6 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்குமேற்படாதிருத்தலும் வேண்டும்.

2.7 விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை கோரும் இறுதித் தேதிக்குள் அனைத்து தகுதிகளையும் நிர்ணயிக்கப்பட்ட வயதையும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படுவார்.

**குறிப்பு :- ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவராவார்.**

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

அ.நி.சு. 10/2025 இன் அட்டவணை இலக்கம் VI இன் படி பயிற்சியளிக்கும் தரத்திற்கு உரித்தான மாதாந்த கொடுப்பனவு ரூபா. 41,317.00 ஆன தொகையில் ஆரம்பித்து தொடர்ந்து கொடுப்பனவு வழங்கப்படும் என்பதோடு, பயிற்சிக் காலத்தின் முடிவில் III ஆந் தரத்திற்கு நியமனம் பெற்றதன் பின்னர் 2025.01.01 ஆந் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை I இன் MN 3 - 2025 இன் பிரகாரம், ரூபா. 52,250 - 10x800 - 11x1190 - 10x1320 - 10x1350 - ரூபா 100,040/- சம்பளம் வழங்கப்படும்.

(2027.01.01 ஆந் திகதி வரை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அவ் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**04. சேவை நிபந்தனைகள் :**

4.1 இந் நியமனம் நிரந்தரமானது. இதற்கு ஓய்வூதியம் உண்டு. மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டியிருக்கும். அரசாங்கத்தால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது, மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதோடு, அவர் தகுதிகாண் காலத்தினுள் தமது கடமைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானதாக பேணிச் செல்லப்பட்டிருப்பின் மற்றும் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருப்பின் மற்றும் சேவையில் உறுதிப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருப்பின் பிற தகுதிகாண் காலம் நிறைவுற்றவுடன் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

4.3 அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்தினுள் பெற்றிருத்தல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 03 வருடங்கள் கடந்து செல்ல முன் சேவையில் இணைந்து கொண்ட மொழி ஊடகத்திற்கு மேலதிகமாக பிற அரசகரும மொழி / மொழிகள் தொடர்பான தேர்ச்சியை உரிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.5 III ஆந் தரத்தில் 05 வருடத்தை தாண்டுவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க.பொ.த. (சா.தரம்) திறமைச் சித்தி மட்டத்திற்கு சமனான மட்டத்தில் உள்ள தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.6 இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் / பதவி உயர்வு வழங்கும் நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் அதற்கமைய ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் நடைமுறை ஒழுங்கு விதிகள், வடமேல் மாகாண சபைகள் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஒழுக்காற்று நடவடிக்கை சட்டக் கோவைகளுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணத்திற்கும், அரசாங்க மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் மற்றும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு சகல உத்தியோகத்தர்களும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை :-**

5.1 எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். பரீட்சைப் பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்துள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் ஒழுங்குவரிசையின் படி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். முன்னுரிமைப் பட்டியலின் ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையினை விடக் குறைவாக இருப்பின் அவர்களுக்கு எழுத்துப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

5.2 நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதோடு கல்வி, தொழிற்கல்வி உள்ளிட்ட அடிப்படை தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் உடற் தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

5.3 ஒரு வருட பயிற்சிக் காலப்பகுதியினுள் வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்ததன் பின்னர் III ஆந் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

**குறிப்பு : மேற்படி பயிற்சிக் காலப் பகுதியின் முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்துவதற்கு தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.**

**06. எழுத்துப் பரீட்சை:**

6.1 எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு, விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6.2 இப்பரீட்சையானது இரு வினாப் பத்திரங்களைக் கொண்டதாக அமையும். விரிவான பரீட்சைப் பாடத் திட்டங்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

| *வினாப் பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையவதற்கு பெறப்படவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

**பாடத்திட்டம் : -**

(01) நுண்ணறிவுத் தேர்வு

விண்ணப்பதாரியின் மொழித் தேர்ச்சி, கணிதத் திறன் மற்றும் தர்க்கத் திறனை அளவிட்டுப் பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள குறுகிய மற்றும் பல்தேர்வு கட்டமைப்புடைய வினாக்களைக் கொண்டுள்ளது.

(02) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை

கட்டட நிர்மாண தொழில்நுட்பம் தொடர்பான அறிவு, அளவுக்கு ஏற்ப வரைதல், திட்டம் அல்லது மாதிரித் திட்டக் குறிப்பு ஒன்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், கட்டமைக்கப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பிலான அடிப்படை அறிவு, கணிப்பீடுகள் தொடர்பான அறிவு, வடிவியல் மற்றும் எந்திரவியல் தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான வினாக்களை உள்ளடக்கியிருக்கும்.

**07. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூபா. 1,200/- ஆன தொகையை வடமேல் மாகாண சபையின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படுமாறு வடமேல் மாகாண சபையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி தனது பெயரில் பெற்றுக்கொள்ளும் வ.மே.மா.ச.நி. 02 பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். வ.மே.மா.ச.நி. 02 ஆம் படிவப் பற்றுசீட்டினைத் தவிர, வேறு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் காசுக் கட்டளைகள் அல்லது பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும், ஏதேனும் ஒரு காரணத்தினால் அல்லது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது எனவும், அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு அல்லது பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். **(பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தம் வசம் வைத்திருப்பது எதிர்காலத்தில் பிரயோசனப்படும்.)**

**08. விண்ணப்பிக்க வேண்டிய நடைமுறை :-**

8.1 இவ்வறிவித்தலின் முடிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2026.04.27 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமேல் மாகாண சபை கட்டிடத் தொகுதி, குருணாகல்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் இடதுபக்க மூலையில் "திட்டமிடல் கலைஞர் பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.2 உரிய மாதிரிப் படிவத்துக்கு ஏற்புடையதற்ற அல்லது உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத அல்லது தாமதமாக கிடைக்கப்பெறுகின்ற அல்லது தெளிவற்ற மற்றும் சரியாக பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

8.3 விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளை நிரூபிக்க, அந்தந்த சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

8.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.04.27 ஆகும்.

**09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 71,240/- க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச / மாகாண அரச சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகவல்களை எவ்விதத்திலும் திருத்தியமைப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையிலிருந்து பதவிநீக்க முடியும்.

11. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பங்களை பரிசோதித்து, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்இ வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபையின் (www.psc.nw.gov.lk) என்ற இணையத்தளத்தில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். பரீட்சை நடைபெறுகின்ற தினத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாது விடின், உடனடியாக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

12. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கடித ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

13. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :

பரீட்சார்த்தி தாம் தோற்றுகின்ற சகல பாடங்களிற்கும் தமது ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் நிரூபிக்க வேண்டும்.

(அ ) ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு / செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

**குறிப்பு: பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சார்த்தி தவறும்பட்சத்தில் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.**

14. இப்பரீட்சையை நடாத்துதல் அல்லது நடத்தாதிருத்தல், பிற்போடல் தொடர்பான அல்லது நடாத்தியதன் பின்னர் தேர்ந்தெடுத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கைகள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்தில் உள்ளது. அதேபோன்று இந்த அறிவித்தலில் ஏற்பாடுகளாக குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படுமாயின், அது தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விசாரித்து வடமேல் மாகாண கௌரவ ஆளுநரினால் முடிவுகள் எடுக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானதாக கருத்தில் கொள்ளப்படும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

என்.எம்.ஜே. பிரனாந்து
செயலாளர்,

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி,
குருநாகல்.
2026 மார்ச்சு 19.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

அலுவலக உபயோகத்திற்காக

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் திட்டமிடல் கலைஞர் (ஒரு வருட பயிற்சி தரம்) பதவிக்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் √ அடையாளத்தை இடுக )

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் / தமிழில்)
திரு/ திருமதி/ செல்வி ……………………………………………………………………………………………

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
Mr./Miss/Mrs./ ……………………………………………………………………………………………

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் / தமிழில்)
திரு./ திருமதி/ செல்வி ……………………………………………………………………………………………

1.4 முழுப் பெயர் (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
Mr./Miss/Mrs./ ……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி ( சிங்களம் / தமிழில் )
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

2.2 நிரந்தர முகவரி (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

2.4 தொலைபேசி இலக்கம் ………………………………………. WhatsApp இலக்கம் ………………………………

2.5 மின்னஞ்சல் முகவரி (email) :………………………………………………………………………………

03. 3.1 பால் : பெண் ☐ ஆண் ☐

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2026.04.27 திகதிக்கு வயது: வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

04. 4.1 விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் : ……………………………………………………………

4.2 பிரதேச செயலாளர் பிரிவு : ……………………………………………………………………………

4.3 கிராம அலுவலர் பிரிவு : ……………………………………………………………………………………………………………

4.4 2026.04.27 ஆம் திகதிக்கு வடமேல் மாகாண நிர்வாகப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவுக் காலம்.:
ஆண்டுகள் …………………………. மாதங்கள் ………………………………… நாட்கள் ……………………………….

05. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:

5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்
பரீட்சை ஆண்டு ………………… மாதம் ……………… சுட்டெண் ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* | | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த. (உ .த.)
பரீட்சை ஆண்டு ………………… மாதம் ……………… சுட்டெண் ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3 தொழில் தகைமைகள்:

| *நிறுவனம்* | *கற்ற பாடநெறி* | *கால எல்லை* | *பெறுபேறு* | *சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

06. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்:

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் …………………………… தொகை ………………………………… திகதி ………………………………
கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் ………………………………………………………………………………………………

பற்றுசீட்டை இங்கே ஒட்டவும்

**7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவாராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

……………………………….. ……………………………………………………..
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**8.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற நிறுவனத் தலைவர்/ பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 71,240/- க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க / மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வன்/ செல்வி ……………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் …………………… ஆம் திகதி என் முன்னிலையின் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

கையொப்பம் : ......................................................................
உறுதிப்படுத்துபவரிக் பெயர் : ......................................................................
பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ......................................................................
திகதி : ......................................................................

03-1185/1

---

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

## வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பின்வரும் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள பெண் / ஆண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *குறியீட்டு எண்.* | *பதவிப் பெயர்* | *ஆட்சேர்ப்பு செய்யப்படும் அடிப்படை* |
|---|---|---|
| 01. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) தரம் III | நிரந்தர அடிப்படையில் |
| 02. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) ஒரு வருட பயிற்சி தரம் | ஒரு வருட பயிற்சியின் பின்னர் நிரந்தர அடிப்படையில் |

** மேலே உள்ள குறியீட்டு எண் 01 இன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாவிட்டால், வாய்ப்பு எண் 02 க்குச் செல்லும்.

இப்பரீட்சை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2026 மே மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது. இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**01. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் :-**

மேலே உள்ள அனைத்து பதவிகளுக்கும்,

(அ ) கல்வித் தகைமைகள் :-

பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் கணிதப் பாடவிதானத்தைச் சேர்ந்த பாடங்கள் மூன்றுடன் கூடிய க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையை ஒரே தடவையில் சித்தியெய்தியிருத்தல்.

அல்லது

தொழில்நுட்பவியல் பாட விதானத்தின் பொறியியல் தொழில்நுட்பவியில், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியெய்தியிருத்தல்.

மற்றும்

சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**க.வே. - மேற்கூறிய கல்வித் தகைமைகளுடன் ஒவ்வொரு பதவிக்குமான தொழிற் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

(ஆ) தொழிற் தகைமைகள் :-

| *பதவிப் பெயர்* | *தொழிற் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) தரம் III | I. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சகத்தால் வழங்கப்படும் (மட்டக்குளி, லபுதுவ, யாழ்ப்பாணம்) கணிய அளவையாளர் உயர் தேசிய டிப்ளோமா.<br>அல்லது<br>II. இலங்கை கணிய அளவையாளர்கள் நிறுவனத்தால் வழங்கப்படும் கணிய அளவையியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா.<br>அல்லது<br>III. வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும் கணிய அளவையியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா.<br>அல்லது<br>IV. தொழிற்துறைக்கு உரித்தான தேசிய தொழிற் தகைமையின் (NVQ) 06 ஆம் மட்டத்துடைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>V. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக உள்ளதா என்பது பற்றி மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |

| *பதவிப் பெயர்* | *தொழிற் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) ஒரு வருட பயிற்சி தரம் | I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியில் பதவியுடன் தொடர்புடைய துறையில் பாடநெறியொன்றை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>II. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |

**க.வே. மேற்படி சகல கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் 2026.04.27 ஆந் திகதிக்கு முன் அல்லது அன்றைய தினம் முழுமைப்படுத்தி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**02. ஏனைய தகைமைகள்:**

2.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 எல்லா விண்ணப்பதாரர்களும் வடமேல் மாகாணத்தினுள் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல், உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (DS-04 கிராம அலுவலர் சான்றிதழ்) மூலம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் விண்ணப்பதாரிகளும் DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் மூலம் தாங்கள் வசித்து வரும் காலம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

2.4 விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணையும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 ஆண்டுகளில் வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால், அவ்விண்ணப்பதாரிகள் தொடர்பில் மேற்படி 2.3 ஆம் பிரிவின் படி கவனத்திற் கொள்ளப்படுவார்கள். வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS 04) மற்றும் விவாகச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

2.5 குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டால் குறைந்தபட்சம் 10 வருடங்கள் வடமேல் மாகாணத்தினுள் சேவையாற்றுதல் வேண்டும்.

2.6 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்குமேற்படா திருத்தலும் வேண்டும்.

2.7 விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை கோரும் இறுதித் தேதிக்குள் அனைத்து திகதிகளையும் நிர்ணயிக்கப்பட்ட வயதையும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படுவார்.

குறிப்பு : ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவராவார்.

**03. சம்பள அளவுத்திட்டம் :**

3.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) தரம் III

இப்பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2025.01.01 ஆந் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை I இன் MN 3 - 2025 இன் பிரகாரம்,

ரூபா 52,250.00 - 10x800 - 11x1190 - 10x1320 - 10x1350 - 100,040.00 ஆகும்.

(2027.01.01 ஆந் திகதி வரை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அவ் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.)

3.2 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) ஒரு வருட பயிற்சி தரம்

அ.நி.சு. 10/2025 இன் அட்டவணை இலக்கம் VI இன் படி பயிற்சியளிக்கும் தரத்திற்கு உரித்தான மாதாந்த கொடுப்பனவு ரூபா 41,317.00 ஆன தொகையில் ஆரம்பித்து தொடர்ந்து கொடுப்பனவு வழங்கப்படும் என்பதோடு, பயிற்சிக் காலத்தின் முடிவில் III ஆந் தரத்திற்கு நியமனம் பெற்றதன் பின்னர் மேற்படி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள MN 3 - 2025 இற்கு உரித்தான சம்பள அளவுத்திட்டத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**04. சேவை நிபந்தனைகள்:**

4.1 இந் நியமனம் நிரந்தரமானது. இதற்கு ஓய்வூதியம் உண்டு. மேலும்இ நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டியிருக்கும். அரசாங்கத்தால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவதுஇ மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதோடு, அவர் தகுதிகாண் காலத்தினுள் தமது கடமைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானதாக பேணிச் செல்லப்பட்டிருப்பின் மற்றும் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருப்பின் மற்றும் சேவையில் உறுதிப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருப்பின் பிற தகுதிகாண் காலம் நிறைவுற்றவுடன் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

4.3 அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்தினுள் பெற்றிருத்தல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 03 வருடங்கள் கடந்து செல்ல முன் சேவையில் இணைந்து கொண்ட மொழி ஊடகத்திற்கு மேலதிகமாக பிற அரசகரும மொழி / மொழிகள் தொடர்பான தேர்ச்சியை உரிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.5 III ஆந் தரத்தில் 05 வருடத்தை தாண்டுவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க.பொ.த. (சா.தரம்) திறமைச் சித்தி மட்டத்திற்கு சமனான மட்டத்தில் உள்ள தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.6 இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் / பதவி உயர்வு வழங்கும் நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் அதற்கமைய ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் நடைமுறை ஒழுங்கு விதிகள், வடமேல் மாகாண சபைகள் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஒழுக்காற்று நடவடிக்கை சட்டக் கோவைகளுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணத்திற்கும், அரசாங்க மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் மற்றும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு சகல உத்தியோகத்தர்களும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். பரீட்சைப் பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்துள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் ஒழுங்குவரிசையின் படி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். முன்னுரிமைப் பட்டியலின் ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையினை விடக் குறைவாக இருப்பின் அவர்களுக்கு எழுத்துப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

5.2 நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதோடு கல்வி, தொழிற்கல்வி உள்ளிட்ட அடிப்படை தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் உடற் தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

5.3 III ஆந் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் போதுமானளவு எண்ணிக்கையினர் தகுதி பெற்றுள்ள போது III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

5.4 III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் போதுமானளவு எண்ணிக்கையினர் தகுதி பெற்றிராத போது எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுகின்ற விண்ணப்பதாரிகள் ஒரு வருட பயிற்சிக் காலப்பகுதியினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்ததன் பின்னர் III ஆந் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

குறிப்பு : மேற்படி பயிற்சிக் காலப் பகுதியின் முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்துவதற்கு தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

**06. எழுத்துப் பரீட்சை:**

6.1 எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு, விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6.2 இப்பரீட்சையானது இரு வினாப் பத்திரங்களைக் கொண்டதாக அமையும். விரிவான பரீட்சைப் பாடத் திட்டங்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

| *வினாப் பத்திரம்* | *நேரம் (மணித்தியாலம் )* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையவதற்கு பெறப்படவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுத் தேர்வு | 01 | 100 | 40% |
| 2. விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை | 03 | 100 | 40% |

பாடத்திட்டம் :

(01) நுண்ணறிவுத் தேர்வு

விண்ணப்பதாரியின் மொழித் தேர்ச்சி, கணிதத் திறன் மற்றும் தர்க்கத் திறனை அளவிட்டுப் பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள குறுகிய மற்றும் பல்தேர்வு கட்டமைப்புடைய வினாக்களைக் கொண்டுள்ளது.

(02) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை

தரநிலைகளைப் (SLS 573) பயன்படுத்தி அளவுப் பட்டியல்களைத் தயாரித்தல், மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி மதிப்பிடுதல், ஒப்பந்த நிபந்தனைகளைப் (CIDA/SBD) பயன்படுத்துதல், பணம் செலுத்தும் செயல்முறைக்கான கூட்டு அளவீடுகளைப் பெறுதல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்குகளை ஆய்வு செய்தல், ஒப்பந்த வேறுபாடுகள்.

**07. பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணமாக ரூபா. 1,200.00 ஆன தொகையை வடமேல் மாகாண சபையின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படுமாறு வடமேல் மாகாண சபையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி தனது பெயரில் பெற்றுக்கொள்ளும் வ.மே.மா.ச.நி. 02 பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். வ.மே.மா.ச.நி. 02 ஆம் படிவப் பற்றுசீட்டினைத் தவிரஇ வேறு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் காசுக் கட்டளைகள் அல்லது பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும், ஏதேனும் ஒரு காரணத்தினால் அல்லது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது எனவும், அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு அல்லது பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். (பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது எதிர்காலத்தில் பிரயோசனப்படும்.)

**08. விண்ணப்பிக்க வேண்டிய நடைமுறை :**

8.1 இவ்வறிவித்தலின் முடிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2026.04.27 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் “செயலாளர்,வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமேல் மாகாண சபை கட்டிடத் தொகுதி, குருநாகல்” என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் இடதுபக்க மூலையில் “தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026” எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.2 உரிய மாதிரிப் படிவத்துக்கு ஏற்புடையதற்ற அல்லது உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத அல்லது தாமதமாக கிடைக்கப்பெறுகின்ற அல்லது தெளிவற்ற மற்றும் சரியாக பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

8.3 விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளை நிரூபிக்க, அந்தந்த சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

8.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.04.27 ஆகும்.

**09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணபத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 71,240.00 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகவல்களை எவ்விதத்திலும் திருத்தியமைப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்க முடியும்.

11. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பங்களை பரிசோதித்து, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபையின் என்ற இணையத்தளத்தில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். பரீட்சை நடைபெறுகின்ற தினத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின், உடனடியாக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

12. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கடித ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி தாம் தோற்றுகின்ற சகல பாடங்களுக்கும் தமது ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் நிரூபிக்க வேண்டும்.

(அ ) ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு / செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

**குறிப்பு: பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சார்த்தி தவறும்பட்சத்தில் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.**

14. இப்பரீட்சையை நடாத்துதல் அல்லது நடத்தாதிருத்தல், பிற்போடல் தொடர்பான அல்லது நடாத்தியதன் பின்னர் தேர்ந்தெடுத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கைகள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தில் உள்ளது. அதேபோன்று இந்த அறிவித்தலில் ஏற்பாடுகளாக குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படுமாயின், அது தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விசாரித்து வடமேல் மாகாண கௌரவ ஆளுநரினால் முடிவுகள் எடுக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானதாக கருத்தில் கொள்ளப்படும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

என்.எம்.ஜே. பிரனாந்து,
செயலாளர்,

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி,
குருநாகல்.

2026, மார்ச் 19.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்) III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் √ அடையாளத்தை இடுக )

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

| விண்ணப்பிக்கும் பதவி / பதவி பெயர் | குறியீட்டு எண் |
|---|---|
| | |
| | |

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் / தமிழில்)
திரு./ திருமதி/ செல்வி ........................................................................................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)
Mr./Miss/Mrs./ ........................................................................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் / தமிழில்)
திரு./ திருமதி/ செல்வி ........................................................................................................

1.4 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)
Mr./Miss/Mrs./ ........................................................................................................
........................................................................................................

1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி ( சிங்களம் / தமிழில் )
........................................................................................................
........................................................................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)
........................................................................................................
........................................................................................................
........................................................................................................

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)
........................................................................................................
........................................................................................................
........................................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் ................................................. WhatsApp இலக்கம் ....................................

2.5 மின்னஞ்சல் முகவரி (email) :........................................................................................................

03. 3.1 பால் : பெண் ☐ ஆண் ☐

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2026.04.27 திகதிக்கு வயது: வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

04. 4.1 விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் : ………………………………………………………………………………

4.2 பிரதேச செயலாளர் பிரிவு : …………………………………………………………………………………………………

4.3 கிராம அலுவலர் பிரிவு : ……………………………………………………………………………………………………

4.4 2026.04.27 ஆம் திகதிக்கு வடமேல் மாகாண நிர்வாகப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவுக் காலம்.:
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

05. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:

5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்
பரீட்சை ஆண்டு ………………… மாதம் ……………… சுட்டெண் ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* | | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த. (உ .த.)
பரீட்சை ஆண்டு ………………… மாதம் ……………… சுட்டெண் ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3 தொழில் தகைமைகள்:

| *நிறுவனம்* | *கற்ற பாடநெறி* | *கால எல்லை* | *பெறுபேறு* | *சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

06. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்:

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் …………………………… தொகை ………………………………… திகதி ………………………………
கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் ……………………………………………………………………………………

| பற்றுசீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

**7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவாராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

……………………………….. ……………………………………………………..
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**8.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற நிறுவனத் தலைவர்/பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 71,240/- க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க /மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபாட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வன்/ செல்வி ……………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் …………………… ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

கையொப்பம் : ......................................................................
உறுதிப்படுத்துபவரின் பெயர் : ......................................................................
பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ......................................................................
திகதி : ......................................................................

03-1185/2

## வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

01. வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிகளிலுள்ள 40 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் தகுதியுள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் இணையவழியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்போட்டிப் பரீட்சையானது வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2026 மே மாதத்தில் குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பரீட்சை மையங்களில் நடாத்தப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. (புத்தளம் பரீட்சை மையத்திற்குப் போதுமான எண்ணிக்கையுடைய விண்ணப்பதாரிகள் இல்லையெனில், குருநாகல் நகரத்தில் மாத்திரம் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.)

**குறிப்பு: எந்தவொரு மதப் பிரிவிலும் துறவறம் பூண்டுள்ள எவரும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்கள்.**

02. **சம்பளத் திட்டம் :-**

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி, வருமானப் பரிசோதகர் பதவியின் தரம் III, II மற்றும் I ஆகியவற்றிற்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் (MN-1 10/2025) ரூபா. 45,230 - 10x630 x 11 - 840 x 10 - 1,190 x 10 - ரூபா 76,360 ஆகும். இச்சம்பளம் 2025.04.01 ஆம் திகதியிலிருந்து உங்களுக்கு உரித்தாகும்.

03. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :-**

3.1 கல்வித் தகைமைகள்:-

(i) க.பொ.த. (சா/தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மிகையாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இப்பாடங்களில் 05 பாடங்களை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

மற்றும்

(ii) க.பொ.த. (உ.தரப்) பரீட்சையில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பது போதுமானது.)

3.2 ஏனைய தகைமைகள் :-

(i) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையும் சிறந்த உடல் ஆரோக்கியமும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கின்ற இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் வடமேல் மாகாணத்தில் கடந்த 03 வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்தவர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் னுளு 04 கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

(iv) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வடமேல் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது 18 இற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

**கவனத்திற் கொள்ள வேண்டியவை:** ஏற்கனவே அரச சேவையிலோ அல்லது மாகாண அரச சேவையிலோ நிரந்தரப் பதவியில் பணியாற்றுபவர்களுக்கு மேற்கூறிய அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**04. சேவை நிபந்தனைகள்:**

4.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டது. மேலும்இ நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதார்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விகிதத்தில் இதற்கான பங்களிப்புக் கொடுப்பனவுகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

4.3 இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை ஒழுங்குவிதிகள், நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, மாகாண நிதி விதிக்கோவை, வடமேல் மாகாண வருமானப் பரிசோதகர் சேவையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை மற்றும் அரசாங்கத்தினாலும் வடமேல் மாகாண சபையினாலும் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது வெளியிடப்படவுள்ள ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க செயற்படுவதற்கு அனைத்து உத்தியோகத்தர்களும் கடமைப்பட்டுள்ளனர்.

**05. ஆட்சேர்ப்பு முறை :-**

5.1 மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70% ஆனவை திறந்த போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். நியமனம் பெறுவதற்குத் தகுதி பெறுவதற்காக, பரீட்சை நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்தது நாற்பது சதவீதத்தை (40%) பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது 50% இனையும் பெற்றிருத்தல் வேண்டும்.

5.2 மேற்கூறியவாறு நியமனம் பெறுவதற்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்குமுறை வரிசைப்படி முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலானோர் அடிப்படைத் தகுதிகள் மற்றும் உடல் தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**06. பரீட்சை நடைமுறை :-**

இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது. இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலங்களில் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

| | *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| (i) | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 |
| (ii) | மொழித் தேர்ச்சி | 01 மணித்தியாலம் | 100 |

**(i) நுண்ணறிவுப் பரீட்சை :-**

பரீட்சார்த்தியின் பொது நுண்ணறிவு, தர்க்கரீதியான திறன், கருத்து வெளிப்பாடு, எண்கணிதத் திறன் மற்றும் கிரகித்தல் ஆற்றல் ஆகியவற்றை அளவிடும் வினாத்தாள் இதுவாகும்.

**(ii) மொழித் தேர்ச்சி :-**

விண்ணப்பதாரரின் எழுத்துக்கூட்டல், இலக்கணப் பயன்பாடு, தெளிவான கருத்து வெளிப்பாடு, மொழிப் பிரயோகங்கள் பற்றிய அறிவு, சுருக்கமெழுதுதல் மற்றும் கட்டுரை எழுதும் திறன் ஆகியவற்றை அளவிடும் வினாத்தாள் இதுவாகும்.

**07. பரீட்சைக் கட்டணம்:-**

பரீட்சைக் கட்டணமாக ரூபா. 1,200/- இனை வடமேல் மாகாண சபையின் இலக்கம் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படும் வகையில், வடமேல் மாகாணத்திலுள்ள ஏதேனும் ஒரு பிரதேச செயலகத்தில் செலுத்தி, உங்கள் பெயரில் பெற்றுக்கொண்ட வ.மே. மா. நி. 02 பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டிச் சமர்ப்பித்தல் வேண்டும். வ.மே. மா. நி. 02 படிவத்திலான பற்றுச்சீட்டைத் தவிர, ஏனைய நிறுவனங்களில் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைக் கட்டணங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், அத்தகைய பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதையும், அக் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றீடு செய்ய முடியாது என்பதையும் கவனத்திற் கொள்க. (மேலதிகத் தேவைக்காக பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்).

**08. விண்ணப்பிக்க வேண்டிய முறை :-**

8.1 இந்தப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோருதல் இணையவழி முறை மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்படும். வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான (psc.nw.gov.lk) இற்குப் பிரவேசித்து, இணையவழி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதன் பின்னர்,நீங்கள் இணையவழியாகப் பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை PDF கோப்பாகப் பதிவிறக்கம் செய்து, அதன் அச்சிடப்பட்ட பிரதியொன்றையும் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

8.2 பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்ட இணையவழி விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதி 2026.04.08 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

செயலாளர்,<br>
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,<br>
வடமேல் மாகாண சபைகள் கட்டிடத் தொகுதி,<br>
குருநாகல்.

எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தபால் கூரியர் சேவை மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் “வருமானப் பரிசோதகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026” எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

கவனிக்க வேண்டியது: ஏற்கனவே அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ நிரந்தரப் பதவியில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

09. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.04.27 ஆகும்.

10. விண்ணப்பப் படிவங்களைச் சரியாகப் பூர்த்தி செய்யாததால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாகவும், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியைத் தவிர வேறு நபர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாகவும் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் எவையும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. (விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.)

**11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரின் / ஓய்வுபெற்ற நிறுவனத் தலைவர் ஒருவர் / பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஒருவர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்தி பெற்ற நொத்தாரிசு / முப்படைகளின் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவர் / பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பதவயை வகிக்கும் அதிகாரி ஒருவர் அல்லது ரூபா 71,240.00 ஆன தொகைக்கு மேற்பட்ட ஆரம்ப மாதாந்த சம்பளம் பெறுகின்ற அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தளங்களின் பொறுப்புதாரி அல்லது மதத் தலைவர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**12. விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருமாறு காட்டப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் சமர்ப்பிப்பது செல்லுபடியாகும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், விண்ணப்பதாரர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையிலும், இலத்திரனியல் தகவல் தொடர்பு சாதனங்கள் எதனையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும், முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும்இ பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

குறிப்பு : பரீட்சை மண்டபத்தில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்தில், குறித்த விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

**13. தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள் :**

(i) இந்தப் பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கமைய ஏதேனும் ஒரு விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதன் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

(ii) விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு விடயம் தவறானது எனத் தெரிந்தே அதனைச் சமர்ப்பித்துள்ளமை கண்டறியப்பட்டால் அல்லது ஏதேனும் ஒரு முக்கியமான விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவார்.

14. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதற்குரிய பற்றுச்சீட்டுத் தகவல்களுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பங்களையும் அதன் அச்சிடப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடனேயே, அது தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும்.

போட்டிப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு 03 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனில், அது குறித்து உடனடியாக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவுக்கு அறிவித்தல் வேண்டும்.

15. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்வது, விண்ணப்பதாரர் இப்பதவிக்குரிய நியமனத்தைப் பெறுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்பட மாட்டார். தகுதிகளை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

16. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் தொடர்பான விடயங்கள் அல்லது அந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத அல்லது அந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின், அது தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

17. இப்பரீட்சையை நடாத்துதல், ஒத்திவைத்தல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்தியதன் பின்னர் தெரிவு செய்தல் / செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

என். எம். ஜே. பிரனாந்து,
செயலாளர்,

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி,
குருநாகல்.

2026, மார்ச்சு 19.

03-1185/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.